

திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர் வட்டம் பொன்மலை பட்டியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் ( லிமிடெட்) திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் சார்பில் தீரன் நகர் கிளையின் மூலம் கொட்டப்பட்டு இந்திரா நகர் பகுதி பள்ளி கல்லூரி மாணவ – மாணவியர்கள் பயன்பெறும் வகையில் மற்றும் பொதுமக்கள் நேரடியாக மத்திய பேருந்து நிலையம் மற்றும் சத்திர பேருந்து நிலையம் செல்வதற்கு ஏதுவாக மகளிர் விடியல் பயண புதிய பேருந்து வசதியினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி 14/06/2025 அன்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். தொடர்ந்து மகளிர் விடியல் பயண புதிய பேருந்து வசதியினை தொடங்கி வைத்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் பேருந்தில் பயணச்சீட்டு எடுத்து பயணம் செய்தார்கள். பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் டி.சதீஷ்குமார் மாமன்ற உறுப்பினர்கள் தர்மராஜ், ரமேஸ் வட்டக் கழகச் செயலாளர்கள் பரமசிவம் முருகன்,போக்குவரத்து கழக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கன்னங்குறிச்சி பேரூராட்சியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தார்ச்சாலை மேம்படுத்துதல் பணிகளுக்கு 15.06.2025 அன்று அடிக்கல் நாட்டி வைத்து பணிகளை தொடங்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, கன்னங்குறிச்சி பேரூராட்சித் தலைவர் குபேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

## மாய உலகில் வாழும் பழனிசாமியை மீட்க வழியே இல்லை!

## அடுத்த மே தினத்தில், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மட்டுமல்ல;

# பழனிசாமி, அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் பதவியையும் இழந்து நிற்பார்!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை!

**சென்னை, ஜூன் 18--**

**ஒரே கூட்டணியில் தூற்றவும் செய்கிறார்கள்; துதியும் பாடுகிறார்கள்!**

**அடுத்த மே தினத்தில் பழனிசாமி எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மட்டுமல்ல, அதிமுகவின் பொதுச் செயலாளர் பதவியையும் இழந்து நிற்பார்!**

**உட்கட்சி பிரச்சினை, கூட்டணிப் பூசல், கூட்டணி அரசு சத்தம் எல்லாம் எம்.ஜி.ஆர் மாளிகையிலும் கமலாலயத்திலும் தைலாபுரத்திலும் இருந்துதான் நாள் தவறாமல் வருகிறது. அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாத பொம்மைதான் பழனிசாமி.! என்று, கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு அறிக்கை விடுத்துள்ளார்.**



அமைச்சர் கே.என்.நேருவின் அறிக்கை வருமாறு:-

"எதிர்க் கட்சித் தலைவர் பழனிசாமியின் நினைப்பு பெட்டியில்தான் உள்ளது. செய்திகளைப் பார்க்காமல், படிக்காமல் அரைவேக்காட்டுத்தனமான அரசியலைச் செய்து வருகிறார் பழனிசாமி. உட்கட்சிப் பிரச்சினை, கூட்டணிப் பிரச்சினையை மறைக்க அறிக்கை அரசியல் செய்து வருகிறார்" என்று தஞ்சையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடுத்த பதிலடி பழனிசாமியின் நெஞ்சாங் கூட்டை கிழித்துவிட்டது போல!

'நெஞ்சு கிழிஞ்சிருச்சே; எங்கே முறையிடலாம்' என எக்ஸ் பக்கத்தில் வந்து ஒப்பாரி வைத்திருக்கிறார். எங்கள் முதலமைச்சர் சுட்டிக் காட்டியது போல பழனிசாமியின் பதிவும் அதே அரைவேக் காட்டுத் தனமாகத்தான் இருக்கிறது.

தி.மு.க. அரசு வாக்குறுதிகளை நிறைவேற்ற வில்லையாம். யார் சொல்லுவது பழனிசாமி? 2016 சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில், அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் செல்போன், விலையின்றி வழங்கப்படும் என்று சொன்னார்கள். செய்தார்களா? பெரிய பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களில், இலவச 'வைபை' இணையதள வசதி வழங்கப்படும் என வாக்குறுதி கொடுத்தார்களே... ஐந்தாண்டு ஆட்சியில் ஏன் நிறைவேற்றவில்லை? அதற்கு முந்தைய தேர்தலான 2011 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில், ஒவ்வொரு குடும்பத்துக்கும் நாளொன்று 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட 'அம்மா குடிநீர்' வழங்கப்படும் என்று சொன்னார்களே... நிறைவேற்றினார்களா? அம்மா பேங்கிங் கார்டு, தமிழன்னை சிலை, குறைந்த கட்டணத்தில் அம்மா தியேட்டர் என்று கலர் கலராக எத்தனை மத்தாப்புகளைக் கொளுத்தினார்கள்? இதையெல்லாம் நிறைவேற்றாத பழனிசாமி தி.மு.க.வின் வாக்குறுதியைப் பற்றி வக்கணையாகப் பேசுவது வெட்கக்கேடு.

கூட்டணி ஆட்சி, பா.ஜ.க. ஆட்சி, தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு என்றெல்லாம் தினமும் சொல்லி பழனிசாமியின் வயிற்றில் புளியைக் கரைக்கிறது கமலா லயம். இன்னொரு பக்கம் அடிமை பழனிசாமியின் அடிமைகள், 'பழனிசாமிதான் அடுத்த முதல்வர்' என மும்மாரி துதி பொழிந்து கொண்டிருக்கிறார்கள். ஒரே கூட்டணியில் தூற்றவும் செய்கிறார்கள்; துதியும் பாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படியான மாய உலகில் வாழும் பழனிசாமியை மீட்க வழியே இல்லை!

வாக்குச்சாவடியில்தான் முதல்வரை மக்கள் தேர்வு செய்வார்கள். அது நடக்காது என்பதால்தானோ, பழனிசாமியை முதல்வர் ஆக்கத் தியானம் செய்து சிறப்புப் பூஜையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அ.தி.மு.க. கூட்டணிக் குழப்பங்கள் தேர்தல் வரை தொடர்ந்தால், அடுத்த மே தினத்தில் பழனிசாமி எதிர்க் கட்சித் தலைவர் பதவியை மட்டுமல்ல, அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் பதவியையும் இழந்து நிற்பார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சராகி இருந்திருந்தால்தான் பழனிசாமிக்கு மக்கள் நலன் மீது கவனம் இருந்திருக்கும். கூவத்தூரில் பெட்டி பெட்டியாக பணத்தைக் கொடுத்து, முதலமைச்சராக ஊர்ந்தெடுக்கப்பட்ட பழனிசாமிக்கு, கவனம் முழுக்க முழுக்க 'பெட்டி' மீதே தான் இருந்து வருகிறது.

மக்கள் குறைகளைத் தீர்ப்பதே முதன்மையான முழுநேரப் பணி என நாள்தோறும் பணியாற்றி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். தன்னுடைய ஆட்சிக் காலத்தில் டெல்லிக்கு அடிமை சேவகம் செய்வதையே முழு நேரப் பணியாகச் செய்து வந்த பழனிசாமிக்கு மக்கள் நலத்திட்டங்கள் எல்லாம் கண்ணுக்குத் தெரியாது!.

பத்திரிகைகளைப் படிக்காமல், தொலைக்காட்சி செய்திகளைப் பார்க்காமல் வாட்ஸ்அப் தகவலை நம்பி அறிக்கை விடும் பழனிசாமிக்கு கோவம் மட்டும் டன் கணக்கில் வருகிறது. உங்கள் பொய்யை முதலமைச்சர் அவர்கள் ஆதாரத்தோடு அம்பலப்படுத்தியதை எண்ணி பழனிசாமி அவமானப்பட வேண்டும்.

நாட்டில் என்ன நடக்கிறது என்றே தெரியாமல் தொலைக்காட்சியை பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன் என்று கூறி ஆட்சி நடத்தியவர்தானே பழனிசாமி! உங்களைப் போல அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்று ஆட்சி நடத்தாமல், மக்களின் குறைகளைக் காது கொடுத்துக் கேட்டுச் சரி செய்யும் முதலமைச்ச ராக முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார். எந்த வாக்குறுதியையும் நிறைவேற் றாத அடிமை அ.தி.மு.க. ஆட்சி போல் இல்லாமல் சொன்னதை மட்டுமல்ல சொல்லாததையும் நிறைவேற்றி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

உட்கட்சிப் பிரச்சினை, கூட்டணிப் பூசல், கூட்டணி அரசு சத்தம் எல்லாம் எம்.ஜி.ஆர் மாளிகையிலும் கமலாலயத்திலும் தைலாபுரத்திலும் இருந்துதான் நாள் தவறாமல் வருகிறது. அதற்கெல்லாம் பதில் சொல்ல முடியாத பொம்மைதான் பழனிசாமி.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கீழடி அகழாய்வு : தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து

# மதுரையில் இன்று ஆர்ப்பாட்டம்!

## தி.மு.க. மாணவர் அணி சார்பில் நடைபெறுகிறது!

**சென்னை, ஜூன் 19-**

**முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, 'அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் இன்று "மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை" யில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.**

கீழடி ஆய்வை மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசுக்குக் கண்டனம் தெரிவித்து 1.6.2025 அன்று மதுரையில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கழக பொதுக்குழுவில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்மொழி - தமிழ்ப் பண்பாடு ஆகியவை காலத்தால் முந்தையவை என்பதை அகழாய்வுகளும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிகளும் தொடர்ந்து மெய்ப்பித்து வருகின்றன. 5300 ஆண்டுகளுக்கு முன்பே இரும்புத் தாதிலிருந்து இரும்புப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தைத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிற வரலாற்று உண்மை இன்றைய நவீன அறிவியல் ஆய்வுகள் மூலமாக நிறுவப்பட்டிருப்பதைத் தமிழ்நாடு அரசு ஆதாரப்பூர்வமாக வெளியிட்டும்கூட, அதற்கு இந்தியப் பிரதமரோ, இந்திய தொல்லியல்துறையோ வாழ்த்து கூட தெரிவிக்கவில்லை.

இந்தப் பொதுக்குழு நடைபெறும் வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரைக்கு அருகில் உள்ள கீழடியில் நடந்த அகழாய்வுகளின் அடிப்படையில் தமிழர்களின் வைகை ஆற்று நாகரிகம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதற்கான தரவுகள் கிடைக்கப்பெற்று அவை உலகளாவிய ஆய்வு நிலையங்கள் மூலமாக வும் நிறுவப்பட்டிருப்பதைத் தொல்லியல் துறை சார்பில் அதன் அதிகாரியாக இருந்த அமர்நாத் ராமகிருஷ்ணா ஆய்வறிக்கையாகச் சமர்ப்பித்து ஆண்டுகளாகியும் அதனை ஏற்காமல், திருத்தங்கள் தேவை என ஒன்றிய அரசின் தொல்லியல் துறை தெரிவித்திருப்பது, தமிழ் மீதும் தமிழர்களின் பண்பாட்டின் மீதும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்குள்ள வன்மத்தையே காட்டுகிறது.

தங்களின் பொய்யான - கற்பனையான சமஸ்கிருத-சரஸ்வதி ஆற்று நாகரிகத்தை, தமிழர்களின் வைகை ஆற்று - கீழடிஆய்வுகள்உண்மைத்தரவுகளுடன் மிஞ்சிவிட்டன என்ற காழ்ப்புணர்விலிருந்து ஒன்றிய பா.ஜ.க. அரசு வெளிவந்து, கீழடி ஆய்வறிக்கையை ஏற்று, இந்தியாவின் பெருமைமிகு நாகரிகமாகத் தமிழரின் நாகரிகத்தை அறிவிக்க வேண்டும் என இந்தப் பொதுக்குழு வலியுறுத்துகிறது.

கீழடி தமிழரின் தாய்மடி! பரந்துபட்ட பார்வையோடு - அறிவியல் பூர்வமாக எங்களது தொன்மையை நிறுவுகிறோம். இதில் ஆணவ - ஆதிக்க அரசியல் செய்ய நினைத்தால், அதன் விளைவுகள் கடுமையாக இருக்கும் என ஒன்றிய பா.ஜ.க. அரசை இப்பொதுக்குழு எச்சரிக்கிறது!

இவ்வாறு தீர்மானத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

இதையடுத்து, பா.ஜ.க. அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் வருகிற 18ஆம் தேதி புதனன்று தி.மு.க. மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தும் என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி;

கீழடி என்கிற பெயரே பா.ஜ.க அரசுக்கு வேப்பங்காயாகக் கசக்கிறது. கீழடி ஆய்வை மேற்கொள்ளவே நீதிமன்றத்தை நாட வேண்டியிருந்தது. அகழாய்வை மேற்கொண்ட அதிகாரிகள் பா.ஜ.கவின் குரலாக ஒலிக்கவில்லை என்பதற்காக அவர்கள் தூக்கி எறியப்பட்டார்கள்.

கடந்தகால அடிமை எடப்பாடி அரசும் பா.ஜ.கவினரின் பேச்சைக் கேட்டுக் கொண்டு கீழடி அகழாய்வைக் கிடப்பில் போட்டது. தமிழ்நாட்டில் கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான அரசு அமைந்ததும் கீழடி அகழாய்வுக்குப் புத்துயிர் கொடுத்ததோடு துரிதமாக பலகட்ட ஆய்வுகள் நடத்தி அருங்காட்சியகத்தையும் கட்டியெழுப்பினார்.

அறிவியல்பூர்வமாக கீழடி அகழாய்வுகள் நிரூபிக்கப்பட்ட பிறகும் அதை ஏற்று ஆய்வை வெளியிட மறுக்கும் தமிழர் விரோத பா.ஜ.க அரசைக் கண்டித்து இன்று காலை 10 மணிக்கு தி.மு.க. மாணவர் அணி சார்பில், "மதுரை, விரகனூர் சுற்றுச் சாலை"யில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாநில நிர்வாகிகள் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகி கள் அவர்களது தோழர்களுடன் பெருந்திரளாக பங்கேற்று, போராட்டத்தை வெற்றியடையச் செய்ய அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாணவரணிச் செயலாளர் இரா.ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.



சேலத்தில் முதலமைச்சர். மு.க. ஸ்டாலின் அவர்கள். சேலம் பூலாவரி .ஆத்துக்காடு பகுதியில் ரூ 5 கோடியே 20 லட்சம் செலவில் கட்டப்பட்ட பாலத்தை திறந்து வைத்ததையொட்டி வீரபாண்டி ஒன்றிய கழக செயலாளர் வெண்ணிலா சேகர். பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.